உ

கடவுள் துணை.

ஐகோர்ட்டின்

அலங்காரச்சிந்து.

இவை-செஞ்சி

ஏகாம்பரமுதலியாராலியற்றப்பட்டு,

ஆ-இரத்தினவேலுமுதலியாரது

வாணீவிலாஸ அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1898

சென்னை நாராயணமுதலிவீதி 52-வது நெ வீடு.

உ

கடவுள்துணை.

விளம்பரம்.

இதனல் சகலமானவர்களுக்குந் தெரியப்படுத்துவது யாதெனில் இப்புத்தகம்வேண்டுபவர்கள் சென்னை பெத்துநாய்க்கன்பேட்டை நாராயணமுதலிவீதி (52-வது) கதவிலக்கமுள்ள வீட்டில் ஸ்தாபித்திருக்கும் வாணீவிலாஸ அச்சுக்கூடத்தில் விலை சரசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

அமாபிக்கதை படத்துடன்	2	0	0
டிை நல்ல கிளேஸ்கடிதம்	2	8	0
ஸ்கந்தபுராணவசனம் படத்துடன்	2	8	0
பாகவதவசனம்	1	8	0
டிை திக்குகடிதம்	2	8	0
டிை கிளேஸ்கடிதம்	3	0	0
அகஸ்தியர் தேவாரத்திரட்டு திருவாசகம் திருவிசைப்பா திருப்பல்லாண்டு பெரியபுராணச் செய்யுட்திரட்டு படத்துடன் நல்ல கிளேஸ்கடிதத்தில் திருத்தமான பதிப்பு	1	8	0
அகஸ்தியர் வாதகாவியம் 1000	1	0	0
யூகமுனி பெருநூல் வைத்தியகாவியம் ...	1	0	0
அகஸ்தியர் நாலுகாண்டஜாலம்	0	12	0
டிை நல்ல கிளேஸ்கடிதம்	1	4	0
அகஸ்தியர் வைத்தியசில்லறைக்கோர்வை ...	0	14	0
அகஸ்தியர் வாத[illegible]ளமியம்	0	12	0
திருவாதவூரா[illegible]ம் படத்துடன் நல்ல கிளேஸ்கடிதம் திருத்தமானபதிப்பு	0	12	0
ஹிந்துபாலவைத்தியபோதினி	0	10	0
வி-பி. போஸ்டுசார்ச்சு	0	3	0
திருவாசகம் கிளேஸ்கடிதம் படத்துடன் ...	0	8	0
மனோரஞ்சித நாடகம்	0	6	0
பூசாலி பாட்டு	0	4	0
பழனியாண்டவர்பவனிவிலாசக்கும்மி	0	2	0

இப்போது அச்சிட்டுவரும் புத்தகங்கள்.

ஆதிநாடகம்

கோவிலநாடகம்

வயித்திய அரிச்சுவடி இரண்டாம்பாகம்

சோதிட அரிச்சுவடி டிை

இப்படிக்கு

ஸ்ரீ ஆ-இரத்தினவேலுமுதலியார்.

உ

கடவுள்துணை.

ஐகோர்ட்டின் அலங்காரச்சிந்து.

விநாயகர்துதி-நேரிசைவெண்பா.

அன்னைவயலாந்திருசூழ் தகிலமெலாம்பேறோங்கும்
சென்னையெனுமின்னகரில் சிறப்புரவே—உன்னிதமாம்
ஐகோர்ட்டின்கட்டடத்தை அகிலமிசைப்பாடுதற்கு
கையைந்துடையகணன் காப்பு.

ஓரடிதங்கச்சிந்து,

சீரோங்கும் சென்னைதனில் சிறப்புடனேயமைத்த பேரோங்கும் ஐகோர்ட்டின் பிரபலமாம்கட்டடத்தை பாரொங்கும்மிப்புகழை பாடுதற்குமுன் கடவுன்

காருணைமாமுகனே-ஐங்கரா-கடவுளே துணைவிநாயா

சீமையெழுகடலும் சிறப்புற்றுதான்வாழும் அன்னைகுயின்விக்டோரியாள் அரசின்மனம்போலே முன்னுமசீஸாகன் துரை முடித்தபினான்வேலை பார்த்துமனமகிழ்ந்து பார்விமெண்டுதுரைகள் கட்டுதற்குநல்லயிடம் கடலின்கரையோரம் கோட்டைக்கடுத்தயிடம் கூண்டுவிளக்கருகில் சித்திரம்போல் ஐகோர்ட்டை செய்துமுடித்தார்கள் யிப்பெருங்கட்டடங்கள் யெவ்வுலகில்கண்டதில்லை முந்தியுகமாண்டமுடிமன்ன ராஜர்களும் மந்திரசிப்பிகளால் மாளிகை யமைத்தாரென்றும் விந்தையாய்கொலுபீடம் வேணவினோதமென்றும் சித்திரமண்டபத்தில் நித்தமரசாண்டாரென்றும் பதுமையலங்காரம் பளிங்குமாமேடையென்றும் அந்திரலோகமென்றும் யிந்திரன் கொலுவென்றும் சுந்திரகயிலாசமென்றும் சோதிபிரம லோகமென்றும் அளகாபுரியென்றும் அமருபதியென்றும் ஆதிவைகுந்தமென்றும் அளகுமிகுத்ததென்றும் பாதாளலோகத்தை பகரமுடியாதென்றும் யிப்படிக்கிமுன்னோர்கள் யெழுதியநூல்களையும் பாடிப்படித்துவிட்டோம் பார்த்து மகிழ்ந்ததில்லை யிப்போகலியுகத்தில் இயற்றிடும் ஐகோர்ட்டில் யீரேழுபதினாலு லோகமுங்காணலாம் இசைந்திடுந்தெய்வசபை நிஜமென்றுங்கூறலாம் இதுவேசமயமடி வந்திழையே பெண்மயிலே ஸ்நானங்கள்செய்துநல்ல சம்பிரமாய்பணிபூட்டி உம்பர் மகிழும்படி உயர்ந்தசேலையுடுத்தி மத்தாப்புரவிக்கைபோட்டு மணமுள்ள அத்தர்பூசி

சித்தமுடநீவருவாய் ஒயில்தங்கமே
சென்னை ஐகோர்ட்டைப்பார்ப்போம்

விருத்தம்.

கெண்டைநிகர்விழிபாளே மாதேகேளாய்
காணுதபார்ஐகோர்ட்டு கையிலைபோலும்
விண்டுகுறேன்தோற்றுமொரு வினோதமெல்லாம்
வஞ்சியரேவிழியதின்மேல் நோக்கிப்பாரும்
மண்டலத்தில்மதிமிகுந்த சிலாலன் துரையும்
மங்கையரேயமைத்தவொரு வேலையெல்லாம்
கண்டுமேகலியுகத்தார் மகிழநாளும்
காட்டுகிறேன்கவியதினால் கேட்டுவாரும்

நாதநாமக்கிரியை-ஆதிதாளம்

பல்லவி.

அற்புதம்பாரீர் ஐகோர்ட்டின் புதுமையி
னதிசயங்கேளீர்

அநுபல்லவி.

அற்புதம்பாரிக்க அவனியிற்காணாத
சொற்பெரும்வினோதமாய் சென்னையிலேயமைத்த(அற்)

சரணங்கள்.

சிமிட்டிமணலினாலும் செங்கல்கருங்கல்லாலும்
சேர்த்துநடகாலாழம் கோர்த்துபாறையுமட்டும்
அமைத்தபயிட்டிங்கிகல்லு அழகாய்வெளிபுறமும்
அடக்கமாய்உள்புறம் கொடுத்துமேஜைகல்லால்
கட்டினசீரும் பார்க்கவே ஆயிரம் கண்வேணும் பாரும்
சுத்திலும்சன்னலில் சித்திரவேலையாச்சி
சூழும்தேவர்களெல்லாம் கிராதியில்பதிந்தாச்சி
பத்தியேகருங்கல்லால் எங்குவளவுமாச்சி
பார்க்கமூலைக்குமூலை கோரிபோல்தூணாச்சி(அற்)
உள்ளுக்கேகநன்றாய் நாலுகேட்டுமாச்சி
ஓங்கியகேட்டின் கிருதியோவெகுநேர்த்தி
கள்ளமாய்மூலையில் சுருள்படிசுத்தாச்சி
காட்சியாய்மத்தியில் பாட்டைகீழ்வழியாச்சி
யிதுபாரும்வேலை மத்தியில்ஸ்மால்காஸ்ட்
கோட்டதின்மேலை பார்க்க
அண்டாபோல்ஒருகூண்டு சண்டமாககட்டி
அடுத்தசுத்திலும்பெருங் கொடத்தைபோலவெகுகூட்டி
கண்டவர்பிரம்மிக்க கலசமதிலேமாட்டி
கண்கள்சிதரும்படி தங்ககிலுட்டுலூட்டி(அற்)
சுத்திலும்யெங்கெங்கும் வைத்தகலசம்ஜோதி
சித்திரமாய்புஷ்ப வேலையதிலெழுதி
அந்திரமாய்மூன்று அடுக்குஅடிதுடங்கி
அமைத்தவிளக்குகூண்டு அண்டமளாவும்தாங்கி

கண்டிடும்நேராய் கப்பல்களையழைக்கும்
லயிட்டுதுபாராய் யிப்போ
விந்தையாம்சிகரத்தின் விநோதத்தைமிகக்கண்டோம்
வெகுநாழியாயிற்று உள்ளேநுழைந்துபார்ப்போம
தொந்தமாய்வடகேட்டு சிந்தைமகிழபோவோம்
சுகமாய்மேலேகுகர்க்கு படிகளமைத்திருக்கும்(அற்)

லாவணி.

உன்னிதமான சென்னைஐகோர்ட்டை கன்னியேநீபாராய்
உர்ப்பனமாகவே அப்புரம்ஓங்கிடும் கர்ப்பனையைசீராய்
சித்தமதாகவே மெத்தையடுக்குமூன்று வைத்ததைவெகுசீராய்
சிங்காரமாகவே அங்கங்கேமூலையில் தங்கும்சுழல்படிபாராய்
இப்படியாகவே செப்பினாலுனக்கு ஒப்பாரடிமானே
இருக்கும்விநோதங்களை யடுக்காயுரைத்தாலுனக்கேர்க்குமடிதேனே
மண்டலம்புகழ நொண்டிசிந்தாலே விண்டிடுவேன்கேளாய்
மங்கையேவுன்மனம் யெங்கும்செல்லாமல் தங்கியேநீபாராய்

நொண்டிச்சிந்து.

அன்னமேநீபாராய்-படியிலே - அமைத்தகிராதிகளின் அற்புத
மும், முன்னமேதோற்றுதுபார்-எதிரில் - முத்திழைத்தபாவைபோ
ல் சித்திரவேலையும், பக்கத்தில்யிதோபாரும்-ரைட்டர்கள் - பாங்கா
யெழுதும் சிங்கார அறையும், பாட்டைகள் ரூப்ரூமுக்கும்-நன்றாய்-
பகுத்து அமைத்தவொய்யாரங்களும், வாட்டமாய் லயின்லயினாய்-
மத்தியில்-வைத்திருக்குமறைகளுஞ் சித்தமகிழும் சுவரினில்சலவை
க்கல்லால் அப்பளித்து - செய்திருக்குஞ் சித்திரப்பூவேலைகளும்,பா
வையரேபாவைக்கழகு-கீழே-பதித்திடும்பாவுகல்லின் பக்குவங்களு
ம், அலங்காரகதவுகளும்-அதற்-சமைத்திடும்'சன்னல்வேலையர்ப்புத
மும், நாட்டமாயவரவர்கள் உத்தியோகநாணயத்திற் கேற்றசொரு
விடுதிகளும் ஜூரிகள் பேசுதற்கு - வெகு - சுந்திரமாயமைத்திடும
சொகுசுகளும், விந்தையாகலாயர்களுக்கு-யிதோ-வகுத்திடும் ஆபீசி
ன்வண்மைகளும், சுத்தமாயிறங்குதற்கு-நாலு - திக்கிலமைத்திருக்
கும்படியழகும், மத்தியிலே லயிட்டவுசு-வெகு-மாட்சிமையாய்தோ
ற்றுகிற காட்சியும்பார் இத்தனையும்சுற்றிவந்தோம்- இதோ-யிருக்கு
ஞ்செஷன்கோர்ட்டின் அற்புதம்பார் அவனியிலுள்ளவழக்கை- நொ
டியினில்-அருத்துஜெயங்கொடுக்குங்கொலுவிதுவே, புவனமயங்கு
ம்படியாய்-சித்திரங்கள்- பதித்தவலங்காரத்தை உரைக்கிறேன்கேள்
தந்தினதனதனனம்)

தஞ்சாவூர்லாவணிமெட்டு

பாரீர்புகழும்செஷன் கூருமிடமிதுவேநேரு
ஜர்ஜ்ஜிகள் குந்தும்சேரு
கிழக்குமுகம்பாரு
பாவையரேசித்திர வேலைபதனைகண்டு தேரு

வாட்டமானரவுண்டேப்பல்மேஜையலங்காரம்
குரிச்சிகள்சிங்காரம்
சித்திரவேலைபாரும்
வஞ்சியரோகொடுத்தவார்னீஸ்ஜொலிக்கின்றநேறும் ௨
பாருபாருஜர்ஜ்ஜி குந்தியிருக்குமொரு சிறு
சுத்திலும்வேலை பாரு
அவர்முகத்தின் நேரு
பாவையரோதென்றல் பங்காயிழுக்கும்வெகுஜோரு ௩
செஞ்சியேகாம்பரம் சிறுவன்புவியின்மிசைமேலே
யமைத்தேன் கவியாலே
ஐகோர்ட்டதின்மேலே
சிறுப்போயியதைபார்த்து மகிழ்வோமிந்தவேளை ௪

கும்மி.

கன்னல்மொழியெனும் மாதரசே-வரும்
காமன்மயங்கும் விழியரசே
உன்னிதமானதோர் சித்திரவேலையை
உகந்துபாரடி பெண்ணரசே. ௧
ஜர்ஜ்ஜிகள்குந்திடும் சிட்டிஙாற்காலிகீழ்
சகலாத்துபச்சை பளபளென்ன
அற்புதமாக யிருக்கின்றமேஜையின்
அலங்காரம்பாரடி பெண்ணரசே. ௨
சித்துளிவேலை யமைத்ததுவுமதில்
சிங்காரவார்னீஸ் கொடுத்ததுவும்
சுத்திலும்கிருதி யிருக்குமஅலங்காரம்
சுந்திரம்பாரடி பெண்ணரசே. ௩
யிண்ட்ராபிட்டர்கள் குந்திடவும்-யின்னம்
யிசைவாய்லாயர்கள் பேசிடவும்
கண்டாபோரவுண் டேபில்மத்தியில்
காணுதுபாரடி பெண்ணரசே. ௪
வேணநாற்காலிகள் தானமைத்து-அதில்
வருகும்ஜெனங்களும் குந்துதற்கு
காணவேசொகுசாய் போட்டியிருக்கிற
காட்சியைப்பாரடி பெண்ணரசே. ௫
அற்புதமாகவே சுவரில்யிருக்கிற
ஆனந்தசித்திர வேலைகளை
கற்பனையாக யமைந்திடுநேர்த்தியைக்
கடவுளேவந்து மதிப்பிடலாம். ௬
கொடிகள்செடிகள்போல் தானெழுதி-யதின்
கூடவேயன்னம் பதித்தெழுதி
வடிவாயாளிகள் சிம்பம்யெழுதின
வண்மையைப்பாரடி பெண்ணரசே. ௭

சித்திரவேலை யொருபுரமாமதில்
 செய்திடும்பூவேல் நாற்புரமாம்
உத்தமியேசன்னல் கண்ணாடியிற்செய்த
 உன்னிதங்கேளடி பெண்ணரசே. ௮
பச்சைநீலவர்ணகா செகப்புடனே-யின்னும்
 பலவிதமானதோர் ரங்குகளால்
உச்சிதமாகவே செய்திடும்பூவேலை
 உலகினில்கண்டாயோ பெண்ணரசே. ௯
அத்திமெனும்யானை யொருபுரமாம்மின்னுங்
 கத்திலும்பலவித பட்சிகளாம்
வைத்துயிருக்கும் விநோதங்களைச்சொல்ல
 சித்தமயக்குதே பெண்ணரசே. ௰
யெங்கெனுஞ்சித்திர வேலையலங்காரம்
 யிந்திரலோகம்போல் தோன்றிடுமாம்
மங்கையேயங்கா யமைத்தசிங்காரத்தை
 மகிழ்ந்துபாரடி பெண்ணரசே. ௰௧
கோர்னீஸ்சட்டம் தான்யிழைத்து-நல்ல
 கோலமபோல்மேல்புரம் வேலைசெய்து
வார்னீஸ்மெருவும் கோலத்தின்னழகும்
 வஞ்சியேபாரடி பெண்ணரசே. ௰௨
ஒத்தம்மகிழவே செஷன் ஜூலியும்
 சீருப்பார்த்து மனமகிழ்ந்தோம்
உத்தமியேஸ்மால் காஸ்கோர்ட்டிட
 உன்னிதம்காணலாம் பெண்ணரசே. ௰௩
சின்னகோர்ட்டு யிதுதாண்டி-யதில்
 சித்திரவேலைகள் மிச்சமடி
கன்னியேகிரடர் அமைத்துயிருக்கின்ற
 கட்டடம்பாரடி பெண்ணரசே. ௰௪
ஆளுக்குதகுந்த வேலைகளும்-ஜர்ஜி
 அமருஞ்சிங்காரச் சீட்டுகளும்
நாலுபுரத்திலும் யிருக்குமலங்காரம்
 நானென்னசொல்லுவேன் பெண்ணரசே ௰௫
சலவைகல்லினில் பூவெழுதி-யதை
 சதுரகல்போலவே நானறுத்து
நலமாய்சுவற்றில் அமைத்துயிருக்கிற
 நாணயம்பாரடி பெண்ணரசே ௰௬
பெண்ணேசவுண்டிது பாருயடி-யதை
 பார்க்கவேவானம்போல் தோற்றுதடி
யெண்ணமுடியாத நக்ஷத்திரங்களும்
 யிருப்பதைபாரடி பெண்ணரசே ௰௭
அதிரமாகவே தீர்க்குதடி-யதற்கு
 ஆதாரம்யேதென்று சொல்லுவண்டி

சிந்தைமகிழவே கெந்தர்வனைப்போலே
சித்திரப்பதுமைபார் பெண்ணரசே. ௰அ
என்னமாய்கட்ட நினைத்தாரோ-ஜெக
தீசனேவந்து முடித்தாரோ
உன்னிதமாகவே விண்ணைப்போல்தோற்றிடும்
உச்சிதம்பாரடி பெண்ணரசே. ௰௯
சோதியாம்மூன்று மெத்தையும்பார்த்திப்போ
சுந்தரவுண்டில் நின்றுவிட்டோம்
பாதைபுலப்பட வில்லையடியிப்போ
பாவையரேகிழ போவதற்கு ௨௰
ஆயிரத்தெண்ணூத்தி யெண்பத்தியேழினில்
ஆரம்பமாவே யெடுத்தவேலை
நேயமாயின்னமும் வேலையிருப்பதால்
நிறுத்தினேன்முடிவை யெழுதாமலே ௨௧
அஞ்சாமல்யென்னுடன கூடிவாடியிதோ
வஞ்சிபரோவழி தோற்றுதடி
செஞ்சியேகாம்பரம் சொன்னகவிபோலே
சிறுய்வேடிக்கை பார்த்தமடி. ௨௨

ஆநந்தக்களிப்பு

பல்லவி,

பட்டணம்ஐகோர்ட்டைப்பாரும் யிந்த
பாரினிலிதர்க்கிணை யெதைசொல்லப்போகும்

அநுபல்லவி.

கட்டடம்மதிகவிஸ்தாரம்-யதில்
கலசம்யிருக்கின்ற வேலைகள்ஜோரும்
அட்டதிசையெல்லாம் கோரும்-நல்ல
அழகாயமைத்திட்ட அதிசயம்பாரும் (பட்)
கட்டடமோமெத்தைமூன்று-யதில்
காணும்வேடிக்கைகள் மத்தியில்பாரு
விட்டிடும்கிழவும்மேலே-போனால்
வீணுதான்அங்கேபோய் பார்த்தாலொன்றில்லை (பட்)
சென்னைகெவர்னரும் வந்து-தன்
சித்தமகிழவே பார்த்துமகிழ்ந்து
யின்னம்தடையேதென்று-கோர்ட்டை
இக்ஷணம்வைக்க நினைத்தாரேயன்று (பட்)
வண்டிவிடுகிறலாயம்-வெகு
வகையாகக்கட்டின யிதுவெகுநேயம்
கண்டிடுவேன்ரெண்டாம் பாகம்
காட்டுவேன்யின்ன மதிகவிநோதம் (பட்)

முற்றிற்று.